INDHU TAMIZH THISAI - TAMIL DAILY
புதுச்சேரி பதிப்பு (PUDUCHERRY) • திங்கள், செப்டம்பர் 14, 2026

ஜிப்மர் முன்னாள் மாணவருக்கு தேசிய ஆசிரியர் விருது

புதுச்சேரி

புதுச்சேரி ஜிப்மரின் முன்னாள் மாணவரான டாக்டர் அருண் பாபு, தேசிய ஆசிரியர் விருது பெற்றுள்ளார். ஆசிரியர் தினத்தை முன்னிட்டு டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நடைபெற்ற விழாவில் நமது நாட்டின் குடியரசுத் தலைவரான திரவுபதி முர்மு இவ்விருதை வழங்கினார்.

மருத்துவக் கல்வி, சுகாதாரத் துறையில் புதுமையான முயற்சிகள் மற்றும் அடுத்த தலைமுறை மருத்துவ நிபுணர்களை உருவாக்குவதில் டாக்டர் அருண்பாபு கொண்டுள்ள வாழ்நாள் முழுமையான அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கான சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த உயரிய தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் அருண் பாபு ஜிப்மரில் தனது இளநிலை மருத்துவக் கல்வியான எம்பிபிஎஸ்ஸை 1999–2004-ல் முடித்தார்.

தொடர்ந்து, குழந்தைகள் நல மருத்துவத்தில் எம்டி 2006–2009 கல்வியாண்டில் முதுநிலை சிறப்புப் படிப்பையும் நிறைவு செய்தார். தற்போது, ஆந்திரப் பிரதேசம், மங்களகிரியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (ஏஜஇஎம்எஸ்), குழந்தைகள் நலத் துறை பேராசிரியர் மற்றும் துறைத் தலைவராக பணியாற்றி வருகிறார்.

உலகளவில் அங்கீகரிக்கப் பட்ட மருத்துவப் பட்டதாரிகளுக்கான குழந்தை மருத்துவம் மற்றும் டார்கெட் குழந்தை மருத்துவம் உள்ளிட்ட 34 மருத்துவ நூல்களை அவர் எழுதியுள்ளார். ஆராய்ச்சியாளரான டாக்டர் அருண் பாபு, 110 ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு, 430-க்கும் மேற்பட்ட அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

மருத்துவப் பயிற்சி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட இரண்டு முக்கிய மருத்துவ சாதனங்களுக்கான காப்புரிமைகளையும் அவர் பெற்றுள்ளார்.

அவை, "புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான தலைப் பகுதி அல்ட்ராசவுண்ட் உருவகப்படுத்துதல் கருவி" மற்றும் ''ஸ்டெதாஸ்கோப் பயன்படுத்த ஏதுவான தனிநபர் பாதுகாப்பு உபகரணம்" ஆகும்.

இந்நிலையில் தேசிய விருது பெற்ற டாக்டர் அருண் பாபுவுக்கு, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி பாராட்டு தெரிவித்தார்.

மேலும் அவர், அருண் பாபுவின் இந்த சாதனை, ஜிப்மர் நிறுவனத்தின் அடிப்படை மதிப்பீடுகளையும் உயரிய நோக்கங்களையும் பிரதிபலிக்கிறது. மாணவர்களை முழுமையான தலைவர்களாகவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் ஆராய்ச்சியாளர்களாகவும், உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் கல்வியாளர்களாகவும் உருவாக்குவதில் ஜிப்மருக்கு நீண்டகால பாரம்பரியம் உள்ளது என்றார்.

தினமலர்
புதுச்சேரி | வியாழன் | 10.9.2026

ஜிப்மர் முன்னாள் மாணவருக்கு தேசிய ஆசிரியர் விருது

புதுச்சேரி, செப். 10–

ஜிப்மர் முன்னாள் மாணவருக்கு தேசிய ஆசிரியர் விருது வழங்கப்பட்டுள்ளது.

எய்ம்ஸ் மங்களகிரியின் குழந்தை மருத்துவத் துறை பேராசிரியர் மற்றும் ஜிப்மர் முன்னாள் மாணவர் டாக்டர் அருண்பாபு. இவர், ஒரு சிறந்த மருத்துவக் கல்வியாளர், ஆராய்ச்சியாளர், புதுமையாளர் மற்றும் கல்வித் தலைவர் ஆவார்.

இருபது ஆண்டு கால கற்பித்தல் அனுபவத்துடன், அவர் இளங்கலை மற்றும் முதுகலைக் கல்வி, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் ஆசிரிய மேம்பாட்டுத் திட்டங்களுக்குபங்களித்துள்ளார்.

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மூலம் குழந்தை மருத்துவ உடனடி பரிசோதனை மீயொலி முன்னேற்றத்திற்கு அவர் பங்களித்துள்ளார். புதுமையான கற்பித்தல் முறைகள், பாடப்புத்தகங்கள், டிஜிட்டல் கற்றல் வளங்கள், மருத்துவக் கருவிகள் மற்றும் உருவகப்படுத்துதல் அடிப்படையிலான கற்பித்தல் மூலம் மருத்துவக் கல்வியில் புதுமைகளை அவர் முன்னெடுத்துள்ளார்.

■ எய்ம்ஸ் மங்களகிரியின் குழந்தை மருத்துவத் துறை பேராசிரியரும், ஜிப்மர் முன்னாள் மாணவருமான டாக்டர் அருண் பாபுவிற்கு தேசிய ஆசிரியர் விருதினை ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கினார்.

எண்ணற்ற இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு ஆராய்ச்சியில் வழிகாட்டியுள்ள அவர், ஆராய்ச்சி மற்றும் புதுமை கலாசாரத்தை வளர்ப்பதற்கும் பங்களித்துள்ளார். 400க்கும் மேற்பட்ட அறிவியல் வெளியீடுகள் மற்றும் எண்ணற்ற ஆராய்ச்சித் திட்டங்களுடன், அவரது பணி நீடித்த கல்விச் சிறப்பையும், மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் நோயாளி மையக் குழந்தை மருத்துவப் பராமரிப்பை மேம்படுத்தியுள்ளது.

இதற்காக இவருக்கு தேசிய ஆசிரியர் விருது 2026க்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த 5ம் தேதி டில்லியில் உள்ள விக்யான் பவனில், ஜானதிபதி திரவுபதி முர்மு அருண்பாபுவிற்கு தேசிய ஆசிரியர் விருதினை வழங்கினார்.

தினமணி
ஞாயிற்றுக்கிழமை, 13 செப்டம்பர் 2026

ஜிப்மர் முன்னாள் மாணவருக்கு தேசிய நல்லாசிரியர் விருது

புதுச்சேரி, செப்.12: புதுச்சேரி ஜிப்மர் முன்னாள் மாணவருக்குத் தேசிய நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது.

இது குறித்து ஜிப்மர் நிர்வாகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுச்சேரி ஜிப்மரின் முன்னாள் மாணவரான டாக்டர் அருண் பாபு, தேசிய ஆசிரியர் விருது பெற்றுள்ளார். தில்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு இவ்விருதை வழங்கினார்.

மருத்துவர் அருண்பாபு ஜிப்மரில் எம்பிபிஎஸ் படிப்பை 1999-2004-இல் முடித்தார்.

தொடர்ந்து, குழந்தைகள் நல மருத்துவத்தில் எம்.டி. படிப்பை 2006-2009 கல்வியாண்டில் நிறைவு செய்தார். தற்போது, ஆந்திர மாநிலம் மங்களகிரியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவன குழந்தைகள் நலத் துறை தலைவராக பணியாற்றி வருகிறார். உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பட்டதாரிகளுக்கான குழந்தை மருத்துவம் மற்றும் டார்கெட் குழந்தை மருத்துவம் உள்ளிட்ட 34 மருத்துவ நூல்களை எழுதியுள்ளார்.

மருத்துவர் அருண் பாபு, 110 ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு, 430-க்கும் மேற்பட்ட அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், தேசிய விருது பெற்ற மருத்துவர் அருண் பாபுக்கு, ஜிப்மர் இயக்குநர் வீர் சிங் நெகி பாராட்டு தெரிவித்தார்.

தினமலர் 75
தேசிய தமிழ் நாளிதழ்

ஜிப்மர் முன்னாள் மாணவருக்கு ஜானதிபதி விருது வழங்கல்

ADDED : செப் 08, 2026 07:50 PM

புதுச்சேரி: ஜிப்மர் முன்னாள் மாணவருக்கு தேசிய ஆசிரியர் விருது வழங்கப்பட்டுள்ளது.

எய்ம்ஸ் மங்களகிரியின் குழந்தை மருத்துவத் துறை பேராசிரியரும், ஜிப்மர் முன்னாள் மாணவருமான டாக்டர் அருண்பாபு, ஒரு சிறந்த மருத்துவக் கல்வியாளர், ஆராய்ச்சியாளர், புதுமையாளர் மற்றும் கல்வித் தலைவர் ஆவார்.

இருபது ஆண்டு கால கற்பித்தல் அனுபவத்துடன், அவர் இளங்கலை மற்றும் முதுகலைக் கல்வி, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் ஆசிரிய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு பங்களிப்பு செய்துள்ளார். ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மூலம் குழந்தை மருத்துவ உடனடி பரிசோதனை மீயொலி முன்னேற்றத்திற்கு அவர் பங்களித்துள்ளார்.

புதுமையான கற்பித்தல் முறைகள், பாடப்புத்தகங்கள், டிஜிட்டல் கற்றல் வளங்கள், மருத்துவக் கருவிகள் மற்றும் உருவகப்படுத்துதல் அடிப்படையிலான கற்பித்தல் மூலம் மருத்துவக் கல்வியில் புதுமைகளை அவர் முன்னெடுத்துள்ளார்.

எண்ணற்ற இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு ஆராய்ச்சியில் வழிகாட்டியுள்ள அவர், ஆராய்ச்சி மற்றும் புதுமை கலாசாரத்தை வளர்ப்பதற்கும் பங்களித்துள்ளார். 400க்கும் மேற்பட்ட அறிவியல் வெளியீடுகள் மற்றும் எண்ணற்ற ஆராய்ச்சித் திட்டங்களுடன், அவரது பணி நீடித்த கல்விச் சிறப்பையும், மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் நோயாளி மையக் குழந்தை மருத்துவப் பராமரிப்பை மேம்படுத்தியுள்ளது.

இதற்காக இவருக்கு தேசிய ஆசிரியர் விருது 2026-க்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த 5ம் தேதி டில்லியில் உள்ள விக்யான் பவனில், ஜானதிபதி திரவுபதி முர்மு அருண்பாபுவிற்கு தேசிய ஆசிரியர் விருதினை வழங்கினார்.

Link: https://www.dinamalar.com/news/puducherry/jipmer-alumni-conferred-with-janadhipathi-award/4317621

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

ஜிப்மர் முன்னாள் மாணவருக்கு தேசிய ஆசிரியர் விருது

புதுச்சேரி, செப்.13- ஜிப்மரின் முன்னாள் மாணவரான டாக்டர் அருண் பாபுவுக்கு தேசிய ஆசிரியர் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு டில்லியில் விஞ்ஞான் பவனில் நடந்த விழாவில், ஜனாதிபதி திரௌபதி முர்மு இந்த விருதை அருண் பாபுவுக்கு வழங்கினார்.

மருத்துவக் கல்வி, சுகாதாரத் துறையில் புதுமையான முயற்சிகள் மற்றும் அடுத்த தலைமுறை மருத்துவ நிபுணர்களை உருவாக்குவதில் அவர் கொண்டுள்ள வாழ்நாள் முழுமையான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கான சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும்

வகையில் இந்த உயரிய தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

விருது பெற்ற அருண்பாபு, 1999-2004-ல் ஜிப்மரில் மருத்துவம் படித்தார். தொடர்ந்து, குழந்தைகள் நல மருத்துவத்தில் முதுநிலை சிறப்பு படிப்பை நிறைவு செய்தார்.

இப்போது ஆந்திராவில் உள்ள எய்ம்ஸ் நிறுவனத்தில் குழந்தைகள் நல துறை பேராசிரியராக பணியாற்றி வருகிறார். தேசிய விருது பெற்ற அவருக்கு புதுவை ஜிப்மர் இயக்குனர் வீர்சிங் நேகி பாராட்டுகளை தெரிவித்துள்ளார். டாக்டர் அருண்பாபு 34 மருத்துவ நூல்களை எழுதியுள்ளார். உலகளவில் 2 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகியுள்ளன. 110 ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொண்டு, 430-க்கும் மேற்பட்ட அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். புதிதாக பிறந்த குழந்தைகளுக்கான தலைப்பகுதி அல்ட்ராசவுண்ட் உருவகப்படுத்துதல் கருவி, ஸ்டெதாஸ்கோப் பயன்படுத்த ஏதுவான தனிநபர் பாதுகாப்பு உபகரணம் ஆகியவற்றை தயாரித்து காப்புரிமை பெற்றுள்ளார்.

தாய் கல்வி நிறுவனமான ஜிப்மருக்கு பெருமை தேடி தந்துள்ள அருண்பாபுவுக்கு ஜிப்மர் நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் முன்னாள் மாணவர் சங்கம் ஆகியோர் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர்.

மாலை பூமி
மக்கள் நாளிதழ்
MAALAI BOOMI DAILY Evening

ஜிப்மர் முன்னாள் மாணவருக்கு தேசிய ஆசிரியர் விருதை ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கினார்

புதுச்சேரி, செப்.12–

ஜிப்மரின் முன்னாள் மாணவரான டாக்டர் அருண் பாபு டி அவர்களுக்கு, மிகவும் மதிப்புமிக்க தேசிய ஆசிரியர் விருது (National Award to Teachers - NAT) *2026* வழங்கப்பட்டுள்ளதை முன்னிட்டு ஜிப்மர் நிறுவனம் பெருமிதம் கொள்கிறது. ஆசிரியர் தினத்தை முன்னிட்டு புதுதில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில், இந்தியக் குடியரசுத் தலைவரான திரௌபதி முர்மு இவ்விருதை டாக்டர் அருண் பாபுவுக்கு வழங்கினார். மருத்துவக் கல்வி, சுகாதாரத் துறையில் புதுமையான முயற்சிகள் மற்றும் அடுத்த தலைமுறை மருத்துவ நிபுணர்களை உருவாக்குவதில் அவர் கொண்டுள்ள வாழ்நாள் முழுமையான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கான சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த உயரிய தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் அருண் பாபுவின் மருத்துவக் கல்விப் பயணத்தின் அடித்தளமும், சிறப்புப் பயிற்சியும் ஜிப்மருடன் ஆழமாகப் பிணைந்துள்ளன. அவர் ஜிப்மரில் தனது இளநிலை மருத்துவக் கல்வியான MBBS *(1999–2004)* படிப்பை முடித்ததைத் தொடர்ந்து, குழந்தைகள் நல மருத்துவத்தில் MD *(2006–2009)* முதுநிலை சிறப்புப் படிப்பையும் நிறைவு செய்தார். தற்போது, ஆந்திரப் பிரதேசம், மங்களகிரியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS), குழந்தைகள் நலத் துறை பேராசிரியர் மற்றும் துறைத் தலைவராக டாக்டர் அருண் பாபு பணியாற்றிவருகிறார். மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் மருத்துவச் சேவைத் துறைகளில் ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாகப் பெற்றுள்ள சிறப்பான அனுபவத்தை அவர் மருத்துவ உலகிற்கு வழங்கி வருகிறார்.

இந்த முக்கியமான சாதனை குறித்து ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். டாக்டர் அருண் பாபுவின் இந்த சாதனை, ஜிப்மர் நிறுவனத்தின் அடிப்படை மதிப்பீடுகளையும் உயரிய நோக்கங்களையும் பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டார். மாணவர்களை முழுமையான தலைவர்களாகவும்,புதியகண்டுபிடிப்புகளை உருவாக்கும் ஆராய்ச்சியாளர்களாகவும், உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் கல்வியாளர்களாகவும் உருவாக்குவதில் ஜிப்மருக்கு நீண்டகால பாரம்பரியம் உள்ளதாக டாக்டர் வீர் சிங் நேகி தெரிவித்தார்.

மேலும், ஜிப்மரின் ஆசிரியர்கள் மாணவர்களின் வாழ்நாள் முழுவதற்குமான உத்வேகமாகத் திகழ்ந்து, வழிகாட்டுதல் மற்றும் பொதுச் சேவையின் மீதான ஆழ்ந்த ஆர்வத்தை அவர்களிடையே விதைக்க தொடர்ந்து முயற்சி செய்து வருவதாக அவர் குறிப்பிட்டார். ஜிப்மரில் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் பயிற்சி ஆகிய இரண்டையும் நிறைவு செய்த ஒரு முன்னாள் மாணவர், நாட்டின் உயரிய ஆசிரியர் விருதைப் பெறும் நிலைக்கு உயர்ந்திருப்பது, இந்த வளாகத்தில் தொடர்ந்து பேணப்பட்டு வரும் உயர்தர கல்விச் சிறப்பிற்கான ஒளிமிகு சான்றாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தனது கல்விப் பணிக்காலம் முழுவதும், டாக்டர் அருண் பாபு சிறந்த கல்வித் தலைவராகவும் மருத்துவத் துறையில் புதுமைகளை உருவாக்கிய முன்னோடியாகவும் திகழ்ந்து வருகிறார். உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட Pediatrics for Medical Graduates மற்றும் TARGET Pediatrics உள்ளிட்ட *34* மருத்துவ நூல்களை அவர் எழுதியுள்ளார். இந்நூல்கள் உலகளவில் *2,30,000*க்கும் மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகியுள்ளன.

ஆராய்ச்சியாளரான டாக்டர் அருண் பாபு, *110* ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு, *430*க்கும் மேற்பட்ட அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். அவரது ஆய்வுப் பணிகள் உலகளவில் ஆயிரக்கணக்கான மேற்கோள்களைப் பெற்றுள்ளன. மருத்துவப் பயிற்சி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட இரண்டு முக்கிய மருத்துவ சாதனங்களுக்கான காப்புரிமைகளையும் அவர் பெற்றுள்ளார். அவை, 'புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான தலைப் பகுதி அல்ட்ரா சவுண்ட் உருவகப்படுத்துதல் கருவி' (Neonatal Head Ultrasound Simulation Device) மற்றும் 'ஸ்டெதாஸ்கோப் பயன்படுத்த ஏதுவான தனிநபர் பாதுகாப்பு உபகரணம்' (Auscultation-Friendly PPE) ஆகும்.

கனடாவின் கல்கரி பல்கலைக் கழகத்தின் கம்மிங் மருத்துவப் பள்ளியில் இருந்து பெற்ற 'நியோநேட்டல் பெரினேட்டல் மெடிசின்' (Neonatal Perinatal Medicine) பெல்லோஷிப் படிப்பு அவரது கல்வித் தகுதியை மேலும் உயர்த்துகிறது.

தேசிய ஆசிரியர் விருது, இந்தியாவில் கல்வியாளர்களுக்கு வழங்கப்படும் உயரிய அங்கீகாரங்களில் ஒன்றாகும். கல்வியின் தரத்தை குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தி, மாணவர்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் சிறந்த ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுகிறது.

தனது தாய்க் கல்வி நிறுவனமான ஜிப்மருக்கு இத்தகைய உயரிய பெருமையைத் தேடித் தந்துள்ள டாக்டர் அருண் பாபு டி அவர்களுக்கு, ஜிப்மர் நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் முன்னாள் மாணவர் சங்கம் ஆகியோர் தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.